# சட்டப்பேரவையில் ஜி.ஆர்.வசந்த வேலு பேச்சு!

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

**தார்ச் சாலை அமைத்திடுக!**

உளுந்தூர்பேட்டை தொகுதி. கருவேப்பிலைபாளையம் ஊராட்சியை திருவெண்ணெய்நல்லூர் தாலுகாவிலிருந்து பிரித்து உளுந்தூர்பேட்டை தாலுகாவில் இணைக்க வேண்டும். மதியனூர் முதல் நல்லாளகுப்பம் வரை உள்ள ஊராட்சி ஒன்றிய சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆரிநத்தம் ஊராட்சி, நல்லாளகுப்பம் ஆதிதிராவிடர் பகுதிக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டாருடன்கூடிய 30000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். பொய்கை அரசூர் கிராமத்தில் உள்ள தரைப்பாலத்தை மேம்பாலமாக கட்டித் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தமங்கலம் முதல் எலவத்தடி வரை உள்ள ஒருவழி தார்ச்சாலையை இருவழி தார்ச்சாலையாக மாற்றித் தர வேண்டும்.

எறையூர் அதையூர் சாலையில் உள்ள பழுதடைந்த பாலத்தினை அகற்றி புதிய பாலம் அமைத்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை முதல் திருவெண்ணெய்நல்லூர் வரை செல்லும் நகரப் பேருந்தை ஒட்டனந்தல் கிராமம் வரை நீட்டிக்க வேண்டும். மலட்டாறு கரையேரத்தில் உள்ள அரசூர், தென்மங்கலம், இருவேல்பட்டு, காரப்பட்டு, ஆலங்குப்பம், கண்ணாரம்பட்டு, மேல் தனியாலம்பட்டு, பொய்கைஅரசூர் ஆகிய கிராமங்களில் மலட்டாறு கரையோரம் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, வேலூர் ஊராட்சி அருகில் நிலத்தடி நீரை மேம்படுத்த கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். கிழக்கு மருதூர்

ஊராட்சிப் பகுதியில் கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். ஊடையாநந்தல் ஊராட்சி பகுதியில் கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். சேந்தமங்கலம் ஊராட்சிப் பகுதியில் சேதமடைந்த தடுப்பணையைப் புதுப்பித்து உயரத்தை அதிகரித்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சித்தாணங்கூர் ஊராட்சி, மாமாந்தூர் களர் கிராமத்தில் உள்ள சித்தேரியை புனரமைத்துத் தர வேண்டும். பிள்ளையார்குப்பம் கிராமத்தில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும். மல்லிகா கிராமத்தில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கண்ணாரம்பட்டு கிராமத்தில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக கட்டித்தர வேண்டும். உளுந்தூர்பேட்டை தொகுதி படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறும் வகையில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூரில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர்களுக்கென்று தனியாக தங்கும் விடுதி அமைத்துத் தர வேண்டும். வேலூர் கிராமத்தில் அரசு மாதிரிப் பள்ளிக்கு அருகில் மாணவர்களுக்கு தங்கும் விடுதி ஒன்றை அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, மன்னார்குடி ஊராட்சியில் அமைந்துள்ள தொடக்கப் பள்ளிக்குச் செல்ல பாதை மற்றும் கழிவறை வசதிகள் அமைத்துத் தர வேண்டும். மாமந்தூர் ஊராட்சியில் அமைந்துள்ள நடுநிலைப் பள்ளிக்கு கற்றுச்சுவர் மற்றும் கழிவறை வசதி அமைத்துத் தர வேண்டும். செம்மணங்கூர் ஊராட்சியில் உள்ள அரசு ஆதிதிராவிட நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தாமுயர்த்தித் தர வேண்டும். அதையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூ.கள்ளக்குறிச்சி ஊராட்சி, நல்லாளக்குப்பம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்துத் தர வேண்டும். நல்லாளக் குப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ஆழ்துளைக் கிணறு, கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை உணவுப்பொருள் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் சிதிலமடைந்த நிலையில் உள்ள கிளைச் சிறையை இடமாற்றம் செய்து புதிய கிளைச் சிறை அமைத்துத் தர வேண்டும். உளுந்தூர்பேட்டையில் பொதுப் பணித் துறை (கட்டடம்), உதவிப் பொறியாளர் அலுவலக கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூவாகம் ஊராட்சியில் கூத்தாண்டவர் கோவில் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கோவிலுக்குத் தேவையான குடிநீர், கழிவறை, தங்கும் விடுதி, பேருந்து வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கூவாகம் ஊராட்சி, பாரதி நகரில் வசித்து வரும் இலங்கையைச் சேர்ந்த சுமார் 100 தமிழர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் குடியிருப்பு அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சரவணப்பாக்கம் மற்றும் ஆணைவாரி ஊராட்சிகளில் புதிதாக நியாய விலைக் கடை கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டும். சேந்தநாடு, கெடிலம், செங்குறிச்சி, எறையூர், A.குமாரமங்கலம், திருபெயர், பிடாகம் போன்ற இடங்களில் விவசாய சேமிப்புக் கிடங்குகள் கட்டித்தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆனத்தூர் ஊராட்சி, மேல்தனியாலம்பட்டு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும். கிராமம் ஊராட்சியில் உள்ள சாராய மேடு பகுதியில் இயங்கி வரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டிடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கிரிமேடு ஊராட்சியில் மணல்மேடு பகுதிக்கு புதிய நியாய விலைக் கடை மற்றும் கட்டடம் அமைத்துத் தர வேண்டும். திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி, கண்ணாரம்பட்டு ஆதிதிராவிடர் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை மற்றும் புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, தென்மங்கலம் ஊராட்சி ஆதிதிராவிடர் பகுதியில் புதிய நியாய விலைக் கடை மற்றும் புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும். மாமந்தூர் ஊராட்சி, களர் கிராமத்திற்கு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். அங்கனூர் ஊராட்சியில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.


உளுந்தூர்பேட்டை தொகுதி, சேந்தநாடு ஊராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்தி, தேவையான கட்டட வசதி செய்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட மட்டிகை ஏரியை ஆழப்படுத்திட வேண்டும். மேலும், நிரந்தரமாக ரெகுலேட்டர் உடன்கூடிய தடுப்பணை ஒன்றை நரி ஓடையில் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதியில் பொதுப் பணித் துறைக்கு சொந்தமான 50 பாசன ஏரிகளை ஆழப்படுத்துவதுடன், வரத்து வாய்க்கால்களையும் மதகுகளையும், சீரமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டம் சாராத அரசு மருத்துமனையாக தரமுயர்த்த வேண்டும்.

இவ்வாறு ஜி.ஆர். வசந்த வேலு பேசினார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் தூத்துக்குடியை சேர்ந்த தொழிலதிபர் எஸ்.ஏ.குமார் அவர்களது இல்ல திருமண விழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!





புதுக்கோட்டை, செப். 5 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (05.09.2026 - சனிக்கிழமை ) காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) மஹாலில் புதுக்கோட்டை தலைமை கழக பிரதிநிதிகள் ஏ.கே. எஸ்.விஜயன், மதுரை பாலா ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது. முன்னாள் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், அறந்தாங்கி ராசன், முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ. மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.சரவணன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, ஞான. இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், எம்.லியாகத்அலி, அபுதாஹீர், கீரை.தமிழ் ராஜா, சு.சண்முகம், இரா. ஆனந்த், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, வே.ராஜேஸ், க.ராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பி க்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 22.8.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மறு சீரமைப்பு பணிகள் சம்பந்தமாக, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# லீபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!



கன்னியாகுமரி, செப்.5-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், லீபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.மதியழகன் தலைமையில் ஆமணக்கன் விளை பகுதியில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, பேரூர் செயலாளர்கள் எஸ். வைகுண்ட பெருமாள், G.முத்து, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட விவசாய அணி தலைவர் K.முத்துசாமி, அஞ்சுகிராமம் பேரூராட்சி துணைத் தலைவர் செ.காந்திராஜ், கழக நிர்வாகிகள் D.அரிகிருஷ்ண பெருமாள், P.வென்சி லாஸ், சந்திரசேகர், N.சுயம்பு, ஐயப்பன், ராதாகிருஷ்ணன், V.கிங், சைஜி, J.ஆன்றோ போஸ்கோ உட்பட ஒன்றிய நிர்வாகி கள், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

லீபுரம் ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள சுற்றுலா தலமான வட்டகோட்டை பகுதியில் சுற்றுலா பயணிகள் கடற்கரை பகுதிக்கு சென்று வர அமைக்கப்பட்டிருந்த பாதையானது மிகவும் சேதமடைந்து தற்போது சுற்றுலா பயணிகள் கடற்கரை பகுதிக்கு செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே அந்த சாலையை சீரமைத்து தர மாவட்ட நிர்வாகத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப் பட்டது.

### தென்றல் செல்வராஜ் ஏற்பாட்டில் – தளபதி முருகேசன் தலைமையில்

# கோவை மாவட்ட பாரம் தூக்கும் தொ.மு.ச. அலுவலகம்!

## கே.ஈஸ்வரசாமி எம்.பி. திறந்து வைத்தார்!





கோவை, செப். 5 –

கோவை மாவட்ட பாரம் தூக்கும் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் பொள்ளாச்சி தொழிற்சங்க அலுவலகம் பல்லடம் சாலையில் அமைந்துள்ள நகர திமுக அலுவலக கட்டிடத்தில் உள்ள மேல் மாடியில் உள்ள அறையில் அலுவலகத் திறப்பு விழா , தொழிற்சங்க கொடியேற்று விழா , தொழிற்சங்க உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகிகளுக்கு பாராட்டு நிகழ்வும் நடைபெற்றது

கழக சட்டத்திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் ஏற்பாட்டில் மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், மாவட்டப் பொருளாளர் ஜெயபிரகாஷ் , பொள்ளாச்சி தெற்கு நகரச் செயலாளர் எம்.அமுதபாரதி, நகராட்சி துணைத் தலைவர் எஸ்.கௌதம் ஆகியோர் முன்னிலையில், தொழிற்சங்க செயலாளர் சிராஜுதீன் வரவேற்புரையில் நடைபெற்றது

பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி அவர்கள் கலந்துகொண்டு தொழிற்சங்க கொடியை ஏற்றி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் நகர அவைத் தலைவர் அழகப்பன், நகர துணைச் செயலாளர் நாச்சிமுத்து, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், நகர மன்ற உறுப்பினர் பி.ஏ. செந்தில்குமார், மாவட்ட பிரதிநிதி வடிவேல், வட்டச் செயலாளர்கள் மா.ஜெயச்சந்திரன், போஜராஜன், தொழிற்சங்க துணைத் தலைவர்கள் பாப்பையன், வேணுகோபால் தொழிற்சங்க இணை செயலாளர் சி.உதயகுமார், தொழிற்சங்க துணை செயலாளர்கள் எஸ்.மணியன், ஆர்.காஜாமைதீன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அவினாஷ் கார்த்திக், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, வட்டப் பிரதிநிதிகள் ரஞ்சித், லோகநாதன் முன்னாள் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் லிங்கதுரை, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கமலக்கண்ணன் மற்றும் கூட்டத்தில் அனைத்து கிளை சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் வருகை தந்த அனைவருக்கும் தொழிற்சங்க பொருளாளர் பிரதீப்குமார் நன்றி கூறினார்.





விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தீவனூரில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி ராமச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர்கள் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், வல்லம் அமுதா ரவிக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நீட் தேர்வுக்கு எதிராக போராடி உயிர் நீத்த மறைந்த மாணவி அனிதாவின் நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி திருச்செங்கோடு திமுக அலுவலகத்தில் மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே. எஸ்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது . மாநில தி.மு.க. மாணவர் அணி துணை செயலாளர் ஆர்.சுரேஷ்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் திருச்செங்கோடு கிழக்கு நகர செயலாளர் தா.கார்த்திகேயன் திருச்செங்கோடு ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், அருண்குமார், தளபதி சுப்பிரமணியம், சரவணகுமார், ஏ.பி.ஆர்.சண்முகம், பழனிவேல், தங்கவேல், ராமசாமி, யுவராஜ், பேரூர் செயலாளர் கார்த்திக் ராஜ் மற்றும் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.